சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | அருள்செல்வி |
| கணவர் பெயர் | : | ஜீவபாலன் |
| கிராமம் | : | அண்ணா நகர்,<br>திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | வீட்டக்குடித்தனம் |
| வயது | : | 40 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. R. வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 குமார் என்பவரை தெரியும்.

ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 19.03.2025 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டு நபரான அ.சா.4 சாந்தா என்பவர் என் வீட்டிற்கு வந்து அழைத்தார். அவர் என்னிடம் அ.சா.3 நந்தினி, அவரது தங்கையான நந்திதாசினி வீட்டிற்குள் இருந்து கதவை திறக்கவில்லை என்னவென்று போய் பார்க்க சொன்னார். நான் போய் பார்த்தேன், கதவு திறக்கவில்லை என்று என்னிடம் சொன்னார். நானும், நந்திதாசினி வீட்டிற்கு சென்றேன். என்னுடன் ரவி என்பவர் வந்தார். வீடு உள்புறமாக தாழ்ப்பாள் போட்டிருந்தது, கதவை தட்டி பார்த்தோம் திறக்கவில்லை, கதவை உடைத்து உள்ளே சென்றோம். உள்றே சென்று பார்த்தோம். அவரது கூரை வீட்டில் மேலே குறுக்காக வைக்கப்பட்டுள்ள ஒரு சவுக்கு மரக்கட்டையில் தூக்கில் தொங்கி கொண்டிருந்தார். நாங்கள் இறக்கி பார்த்தோம். இறந்துபோனது போல் தெரிய வந்தது. இந்த நேரத்தில் நாங்கள் சத்தம் போட்டதை கேட்டு அருகில் இருந்த ஊர்க்காரர்கள் வந்து விட்டார்கள். பின்னர் நந்திதாசினி கழுத்தில் இருந்த மெரூன் கலர் ஷாலை கழற்றி வீட்டில் வைத்து விட்டு, ஒரு ஆட்டோவில் நந்திதாசினியை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நான் நந்திதாசினியுடன் வாகனத்தில் பயணம் செய்தேன். அங்கு மருத்துவர்கள் நந்திதாசினியின் உடலை பார்த்து விட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் நந்திதாசினி இறந்துபோன வீட்டிற்கு போலீசார் வருகை தந்தனர். போலீசார் வந்து நந்திதாசினி வீட்டிற்கு வந்து அவர் தூக்கு போட்டுக்கொண்ட இடத்தை பார்த்தார்கள். நானும் கூட இருந்தேன். அவர் தூக்கு போட்டுக்கொண்ட இடத்தை காட்டினேன். அதை போலீசார் போட்டோ எடுத்தார்கள். அந்த இடத்தை பார்வையிட்டு மகஜர் தயார் செய்தார்கள். நான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் நந்திதாசினி தூக்கு மாட்டிக்கொண்டு மெரூன்

கலர் ஷாலை போலீசார் அவரது வீட்டிலிருந்து எடுத்தார்கள். நானும் உடனிருந்தேன். அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் இதை சொல்லியுள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை எல்லாம் காவல் துறையினர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 குமார் அ.சா.2 சாந்தா, அ.சா.3 நந்தினி ஆகியோர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் மற்றும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.2 சாந்தா என்பவர் எப்பொழுது என்னை அழைத்தார் என்றால் மதியம் 12.00 மணிக்கு என்னை அழைத்தார். ஆட்டோவின் பதிவு எண் எனக்கு தெரியாது. அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டேன் என்றால் சரிதான். போலீசார் இறந்துபோன நந்திதாசினி வீட்டிற்கு இரவு வந்தார்களா? மறுநாள் வந்தார்களா? என்றால், அன்றைய தினமே வந்தார்கள். ஆனால் நேரம் ஞாபகம் இல்லை. என்னை போலீசார் விசாரித்த போலீசார் என்ன பதவி வகித்தார் என சொன்னால் என்ன பதவி என்று தெரியாது. போலீசார் எழுதிக்கொண்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் அது தெரியாது. அதைப்போல் என்னிடம் 4, 5 வெற்று தாள்களில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நந்திதாசினி வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றும், என்னிடம் காவல் துறையினர் என்னிடம் எந்தவித விசாரணையும் செய்யவுமில்லை, காவல் துறையினர் எழுதிக்கொண்ட பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் அ.சா.1,

அ.சா.2 கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் உறவினர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு ஆதரவாகவும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இன்று என்னை அ.சா.2 சாந்தா செலவு செய்துதான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தனியாகத்தான் வந்தேன்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.30 18:17:00 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.